# கொழும்பில் மனோ எம்.பியை நேரில் சந்தித்துப் பேசிய மக்கள் மனு வடக்கு – கிழக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகள்



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியை, வடக்கு - கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழு சந்தித்து உரையாடியது.

கொழும்பில் மனோ கணேசன் எம்.பியின் இல்லத்தில், இன்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மக்கள் மனு குழுவின் சார்பில் இணைப்பாளர் ஏ.ஜதீந்திரா, எஸ்.எஸ்.குகநாதன், எஸ்.மகாலிங்கசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இது பற்றி ஊடகங்களுக்குக் கூறியதாவது:-

“எமது சந்திப்பு மிகக் காத்திரமாக நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சித் தலைவர்களுடன், தமிழ்த் தேசிய பிரச்சினை தொடர்பில், மாகாண சபைகள் என்ற அடிப்படையில் பொது 2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 09 வெள்ளிக்கிழமை 22.03.2024 கதிர் 210

## யாழ் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்த உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நிறைவு



இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்திருந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. 2 ▶

## மத்திய வங்கியினரின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் துணிச்சலான முடிவை எடுக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை




மத்திய வங்கியினர் தமக்கு தாமே மேற்கொண்ட சம்பள அதிகரிப்பை உடனடியாக இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (21) நாடாளுமன்றத்தில் விசேட கோரிக்கையொன்றை விடுத்தார்.

மத்திய வங்கியானது சுயாதீனமாக்கப்பட்டமையின் நோக்கம் சம்பளத்தை 70 வீதத்தினால் அதிகரிக்க வேண்டும் என்பதல்ல, அரசியல் தலையீடுகள் இன்றி நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்காகவே இந்த நிறுவனம் சுயாதீனமாக்கப்பட்டது எனவும் 2 ▶

## தாவரங்கள் – விதைகள் பரிசோதனை சான்றிதழ் வழங்கும் பிரிவு யாழில்!

வெளிநாடுகளுக்கு தாவர விதைகள் மற்றும் தாவரங்கள் ஏற்றுமதி செய்தல், அங்கு இருந்து இறக்குமதி செய்யப்படும் விதைகள் மற்றும் தாவரங்களை பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கும் பிரிவு இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தாவர விதைகளுக்கான சான்றிதழ்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

இன்றிலிருந்து அதற்கான நிலையம் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண தபால் நிலையத்துடன் சேர்ந்து இயங்க உள்ளது.

இன்றைய திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (O1)

## எனக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை நாட்டை மீட்டெடுப்பதே எனது நோக்கம்!

### மற்றோரை விட தனது சம்பளம் குறைவு என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்



அண்மைய சம்பள அதிகரிப்பின்போது மத்திய வங்கியின் ஆளுநரான தமக்கு எவ்வித சம்பள உயர்வும் கிடைக்கவில்லை எனவும் தனது சம்பள அதிகரிப்பு பூஜ்ஜியமே எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சம்பள திருத்தமானது பிரதி ஆளுநர் பதவி மட்டம் வரையில் மட்டுமே பொருந்தும் எனவும், மத்திய வங்கி ஆளுநராக உள்ள தனது சம்ளமானது சில கீழ்நிலை அதிகாரிகள் உட்பட பல மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்தை விட குறைவாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“ஒரு தொழில்சார் மத்திய வங்கியாளராக, பொருளாதாரம் இதுவரை சந்தித்திராத மோசமான நெருக்கடியிலிருந்து 2 ▶

## 80 சதவீத எம்.பி.க்கள் நாடாளுமன்றை கலைப்பதற்கு அச்சம் கொண்டுள்ளனர்

### ஜே.வி.பி. யின் விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் உள்ள 80 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு மிகவும் அஞ்சுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “பொதுத்தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் பஸில் ராஜபக்ஷ கேட்ட போது, அதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு சம்மதிக்கும் 113 பேரை அழைத்து வந்து என்னிடம் காட்டுங்கள் என கூறியுள்ளார். தேர்தலுக்கு இவர்கள் எந்தளவுக்கு பயப்படுகிறார்கள் என்பதை இது காட்டுகின்றது.

ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் நடந்தாக வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் எமது நாட்டின் அரசியல் தலைவிதியை மாற்றும். அதனை ரணில் விக்கிரமசிங்ஹவால் தடுக்க முடியாது. இது தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுவதாகும். அரசியலமைப்புச் சட்டம் இதுபற்றி தெளிவாக கூறுகிறது. அதை யாராலும் தடுக்க முடியாது.

பஸில் அமெரிக்காவிலிருந்து வந்து சில நழுவல் போக்குகளை கையாள பார்க்கின்றார். ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போடுவதற்கு தனக்கு ஆள் இல்லை என்பதாலேயே அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் நாடாளுமன்ற தேர்தல் நடந்தால் நன்றாக இருக்கும் என்று கூறுகிறார். பஸிலாலும் 2 ▶

## யாழில் 278 ஏக்கர் காணிகளை இன்று விடுவித்தார் ஜனாதிபதி

இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் 278 ஏக்கர் காணிகளை இன்று யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று விடுவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த தனியார் காணிகள் 278 ஏக்கர் விடுவிக்கப்பட்டு அதற்கான பத்திரங்களையும் உரிமையாளர்களிடம் ஜனாதிபதி வழங்கி வைத்துள்ளார்.

இதற்கமைய ஜே/244 வயாவிளான் கிழக்கு, ஜே/245 வயாவிளான் மேற்கு, ஜே/252 பலாலி தெற்கு, ஜே/254 பலாலி வடக்கு, ஜே/253 பலாலி கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் இருந்து காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(அ)

# ஒன்லைன் மூலம் ரெயில் ஆசன முன்பதிவு செய்தோர் சிரமங்களை எதிர்கொள்வதாக புகார்

## புதிய முறை அறிமுகமாகி ஒரே வாரத்தில் களேபரம்

ஒன்லைன் மூலம் ரயில் ஆசனங்களை முன்பதிவு செய்தவர்களுக்கு, முன்பதிவு செய்யப்பட்ட இ-டிக்கெட் மூலம் ரயிலில் பயணம் செய்ய அனுமதி வழங்குவதில் பல சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும், இதனால் பயணிகள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த புதிய முன் பதிவு முறை தொடங்கப்பட்டு ஒருவாரமே ஆகியுள்ள நிலையில் இது தொடர்பில் ஏராளமான பிரச்சனைகள் எழுந்துள்ளதாகவும், இதுவரை ஏராளமான ரயில் பயணிகள் இது தொடர்பாக புகார் அளித்துள்ளதாகவும் ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரெயில் ஆசன முன்பதிவுகளை ஒன்லைனில் முன்பதிவு செய்யும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ள போதிலும், ரயில்வே துறையின் தற்போதைய சட்ட கட்டமைப்பிற்கு ஏற்ப புதிய அமைப்பை தயாரிக்க சம்பந்தப்பட்ட நிறுவனம் தவறிவிட்டதாக ரயில்வே ஊழியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.


புதிய முறையைப் பயன்படுத்தி ஒன்லைன் மூலம் ஆசனங்களை முன்பதிவு செய்துள்ள பயணிகள் தங்களுடைய ஆசனங்களை உறுதிப்படுத்த ரயில் நிலையங்களுக்குச் செல்லும் போது நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய முறையின் இந்த சிக்கலான சூழ்நிலையால், முன்பதிவு செய்யப்பட்ட ஆசனங்கள் தொடர்பான மின்னணு ஆவணங்களை தம்மோடு வைத்திருந்தாலும், தமக்கு ஆசனம் கிடைப்பதில்லை என பயணிகளிடமிருந்து ஏராளமான புகார்கள் கிடைத்துள்ளதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ரெம-76)

# 2024இல் சுற்றுலாப் பயணிகள் வருகையில் பாரிய அதிகரிப்பு

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் நாட்டில் உருவாக்கப்பட்ட அமைதியான சூழல் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது எனவும், அதற்கமைய விமானப் பயணிகளால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மாறியுள்ளது எனவும் விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் தனியார் நிறுவனத் தலைவர் அதுல கல்கெட்டிய தெரிவித்தார்.*

*அதன்படி 2024 ஜனவரி 1 முதல் மார்ச் 19 வரையில் 8 இலட்சத்து 50 ஆயிரம் விமானப் பயணிகள் விமான நிலைய சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு, இந்த வருட இறுதிக்குள் சுமார் ஒரு கோடி பயணிகள் விமான நிலையத்தைப் பயன்படுத்துவார்கள்*



*என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*2022ஆம்ஆண்டு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்திய மொத்த விமானப் பயணிகளின் எண்ணிக்கை 50 இலட்சமாக இருந்தது எனவும், 2023ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கையை 80 இலட்சமாக அதிகரிக்க முடிந்தது எனவும் அதுல கல்கெட்டிய சுட்டிக்காட்டினார். (அ)*

## கொழும்பில் மனோ .....

குறைந்த பட்ச உடன்பாட்டைக் காண்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு – கிழக்கு மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவுடன், குறைந்த பட்ச உடன்பாட்டை காணும் சிங்கள பிரதான கட்சிகள், தலைவர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் அந்த உடன்பாட்டை இடம்பெறச் செய்ய வேண்டும் எனக் கலந்துரையாடினோம்.

எதிர்வரும் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலா, ஜனாதிபதித் தேர்தலா, அவ்வாறாயின் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள், பொது தமிழ் வேட்பாளர் ஆகிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினோம்.

“வாக்களியுங்கள், ஆட்சிக்கு வந்த பிறகு பார்ப்போம்” என்ற நிலைபாட்டுடன் தமிழ் மக்கள் மத்தியில் வந்து வாக்குக் கோர சிங்கள பிரதான கட்சிகள், கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கு இனிமேல் இடம் தர முடியாது என்ற பொது நிலைபாட்டைப் பற்றியும் உரையாடினோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியால், மலையகத் தமிழர் தொடர்பில் சமூக நீதி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து சிங்கள பிரதான கட்சிகளுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளது. எமது ஆவண நிலைப்பாடுகள், அந்தந்த கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இடம்பெறுவதைப் பொறுத்தே எமது நிலைப்பாடு அமையும் என்ற முடிவை நாம் ஏற்கனவே எடுத்துள்ளோம் என்பதை நான், வடக்கு – கிழக்கு மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுக்கு எடுத்துக் கூறினேன்.

ஈழத்தமிழ் சகோதரர்களின் குறைந்த பட்ச அபிலாஷைகளை நடைமுறைச் சாத்தியமான முறையில் விட்டுக்கொடுக்காமல் முன்னெடுக்கும் வடக்கு – கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் எனவும் நான் உறுதி அளித்தேன்.” – என்றார். (அ)

## 80 சதவீத எம்.பி.க்கள்...

முடியாது, மகிந்தவாலும் முடியாது, கோத்தபாயவுக்கு முடியவே முடியாது, பஸிலை மக்களுக்கும் பிடிக்காது, நாமல் இன்னும் முதிர்ச்சியடைய வில்லை, இவர்களை விட்டால் குடும்பத்தில் வேறு யாரும் இல்லை, குடும்பத்திற்கு வெளியே உள்ள ஒருவருக்கு கொடுக்கவும் அவர்கள் விரும்பவில்லை. எப்படியோ இந்த தேர்தலில் அவர்கள் தோற்கடிக்கப்படுவது உறுதி” என்றார். (ரெம-75)

## மத்திய வங்கியினரின் சம்பள...

அவர் தெரிவித்தார்.

எனவே, ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதை விட, இந்த சம்பள அதிகரிப்பு விடயத்தில் அரசாங்கம் துணிச்சலுடன் உடனடியாக தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெம-74)

## யாழ் மாவட்ட ...

யாழ் மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து கடந்த 19 ஆம் திகதி காலை முதல் இன்று வரை யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இந்த நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நான்கு மீனவர்களுக்கும் ஆதரவு தெரிவித்து இன்று காலை முதல் நூற்றுக் கணக்கான மீனவர்கள் ஒன்றுகூடியிருந்தனர்.

பின்னர் மீனவர்கள் ஒன்றிணைந்து இந்தியத் துணைத் தூதரகத்தை நோக்கி பேரணியாக சென்று அங்கு முற்றுகைப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சில மணி நேரப் போராட்டத்தின் பின்னர் ஒரு சில மீனவர்கள் மாத்திரம் இந்தியத் துணைத் தூதரகத்துக்குள் பேச்சுவார்த்தைக்காக அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடைபெற்றதை அடுத்து மீனவர்கள் மீண்டும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுடன் கலந்துரையாடி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

கடற்றொழில் அமைச்சரும் இலங்கைக் கடற்படையும் விடும் தவறுகளாலேயே இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் வருவதாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரி கூறியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (01)

## எனக்கு சம்பளம் ...

நாட்டை மீட்டெடுப்பதற்கு எனது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்த வேண்டும் என்ற எனது விருப்பத்தின் காரணமாகவே நான் இந்த பதவியை பொறுப்பேற்றேன், அதனால் எனது சம்பளத்தில் எனக்கு எந்தவொரு பிரச்சனையும் இல்லை” எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-73)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# உலக வாய்வழி சுகாதார தின நிகழ்வு கல்முனையில் சிறப்புற நடைபெற்றது



(வி.ரி.சகாதேவராஜா)

உலக வாய்வழி சுகாதார தின நிகழ்வு கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

உலக வாய்வழி சுகாதார தினத்தினையொட்டிய இந்நிகழ்வானது நேற்று முன்தினம் வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவினரின் ஏற்பாட்டிலும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை பல் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்எஸ்யூ..ஷிஃபா வழங்கினார்.

வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர் டாக்டர் ஜஎம்ஜ.முன்ஷிப்பினால் பற்சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில், பற்களின் முக்கியத்துவம், பற்களில் ஏற்படும் நோய்களின் அறிகுறிகள், வாய் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பங்கள், பல் துலக்கும் சரியான முறைகள், பற்சிகிச்சை முறைகள், மருந்துகள் பற்றி விவரித்தார்.

பற்சிகிச்சை பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. வி.சுதானந்தி நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜே. மதன், வைத்திய நிபுணர்கள், பல் வைத்திய நிபுணர்கள், தாதிய பரிபாலகர்கள், வைத்திய அதிகாரிகள், நிர்வாக உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சியினை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. என்.மனோஜினி தொகுத்து வழங்கியிருந்தார்.

# வேலோடுமலை முருகன் ஆலயத்தில் இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் அன்னதான மண்டபம் திறந்துவைப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் வரலாற்று பிரசித்தி பெற்ற ஈரளகுளம் வேலோடும் மலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அன்னதான மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வேலோடுமலை முருகன் ஆலய தர்மகர்த்தா எஸ். தியாகராஜா தலைமையில் நடைபெற்ற அன்னதான மண்டப திறப்பு விழாவில், இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மண்டபத்தை திறந்து வைத்தார்.

லண்டனில் வாழும் திருமதி ஜீவா தேவி வரதராஜன் , காலஞ்சென்ற திரு மயில்வாகனன் வரதராஜன் ஏவிஎஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த அன்னதான மண்டபத்தை ராமகிருஷ்ண மிஷன் வேண்டுகோளின்படி நிறுவியுள்ளனர்.

இந்தப் பணியில் ராமகிருஷ்ண மிஷன் தொண்டர் கருணாநிதி பொறுப்பேற்று முருகன் ஆலயத்தின் தலைவர் தியாகராஜாவின் ஒத்துழைப்போடு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

அன்னதான மையத்தோடு இணைந்து சமய நூல்கள் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களையும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ராமகிருஷ்ணன் மிஷன் பக்தர்கள், அன்பர்கள் கலந்து கொண்டனர்.

# பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கல்

(சர்ஜுன் லாபீர்)



அரச சார்பற்ற கிரிசாலிஸ் நிறுவனம் சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 175 மாணவர்களுக்கான இலவச பாடசாலை உபகரண பொதி வழங்கும் நிகழ்வு நேற்று (21) சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்அஸ்லம்தலைமையில்இடம்பெற்றது.

இப் பாடசாலை உபகரணப் பொதி வழங்கும் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொதிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வுக்கு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம்நவாஸ், விடயத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரக்கீபா, சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் எம்.எல்.எஸ்.றெஜீனா, கிரிசாலிஸ் நிறுவனத்தின் திட்ட உதவி இணைப்பாளர் பி. தசதரா, திட்ட இணைப்பாளர் ஜி.ரொகான், மற்றும் கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம்



(நூருல் ஹுதா உமர்)

கிழக்குப்பல்கலைக்கழகத்தில்சர்வதேசமொழிபெயர்ப்பு தினம் 2023 விழா மற்றும் கண்காட்சி ஆகியன வியாழன் (21) பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றன.

கலை கலாசார பீட மொழித்துறை ஏற்பாட்டில், துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீகருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஜி. விக்னேஷ்வரன் கௌரவ அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்விக் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி மனோகரன் அதிதி உரையாற்றியதுடன் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர் சுதானந்தன், தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் மதிவேந்தன், பட்டதாரி கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கென்னடி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது The Student Translator மற்றும் The Translator's Glossary ஆகிய தலைப்புகளில் மென்பிரதி நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டதுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் அஷ்ரப் நூல் திறனாய்வு உரையை நிகழ்த்தினார்.

விழாவின் மற்றொரு முக்கிய அம்சமாக நடைபெற்ற மொழிபெயர்ப்பு தொடர்பான விடயங்கள் அடங்கிய கண்காட்சியை கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வின்போது அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தான் கடல் பரப்புக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் மோதலில் ஒருவர் உயிரிழப்பு – இருவரைக் காணவில்லை!



நடுக்கடலில் இந்திய மீனவர்களுக்கும் பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் 2 இந்திய மீனவர்கள் காணாமல் போனதாகவும், ஒரு பாகிஸ்தானிய மாலுமி உயிரிழந்ததாகவும் பாகிஸ்தான் கடலோரக் காவல் படை வியாழக்கிழமை தெரிவித்தது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கடலோரக் காவல் படை வெளியிட்ட தகவலில், பாகிஸ்தான் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் சட்டவிரோதமாக மீன்பிடிக்க வந்த 8 இந்திய மீன்பிடி படகுகளை கடலோரக் காவல் படை அதிகாரிகள் பிடிக்க முயன்றனர். அதிகாரிகளை கண்டதும் அதில் ஒரு இந்திய மீன்பிடி படகு வேகமாக இயக்கப்பட்டது. அதிகாரிகளின் கடுமையான எச்சரிக்கைக்குப் பிறகு அந்தப் படகு நிறுத்தப்பட்டது.

அந்தப் படகைப் பரிசோதனை செய்ய கடலோர காவல் படை அதிகாரிகள் ஏறியவுடன் இருதரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. அப்போது மீன்பிடிப் படகு திடீரென வேகமாக இயக்கப்பட்டதில் அருகிலிருந்த கடற்படை கப்பல் மீது மோதி அந்த மீன்பிடிப் படகு கவிழ்ந்தது. அதில் இருந்த அனைவரும் கடலுக்குள் மூழ்கினர். உடனே மீட்புப் பணியில் ஈடுபட்ட பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் கடலில் மூழ்கிய 7 இந்திய மீனவர்களில் 5 பேரையும் பாகிஸ்தான் கடலோரக் காவல்படை அதிகாரிகள் 4 பேரையும் மீட்டனர்.

இச்சம்பவத்தில் பாகிஸ்தான் மாலுமி ஒருவர் உயிரிழந்தார். காணாமல் போன 2 இந்திய மீனவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சட்டவிரோதமாக பாகிஸ்தான் கடல் பகுதியில் மீன்பிடிக்க வந்த இந்திய மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பாகிஸ்தானின் கடல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும், என தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# ஐ.பி.எல். தொடர் இன்று சென்னையில் ஆரம்பம்! முதல் போட்டியில் சென்னை - பெங்களூரு அணிகள்



17ஆவது ஐபிஎல் தொடர் இன்று சென்னையில் ஆரம்பமாகின்றது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று மாலை 6.30 க்கு கலை நிகழ்ச்சிகளுடன் இந்த வருடத்துக்கான ஐபிஎல் தொடர் தொடங்குகின்றது.

இரவு 8. மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதல் போட்டியில் சென்னை - பெங்களூரு அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.

சென்னை அணியின் புதிய தலைவராக ருதுராஜ் கெய்க்வாட் நியமிக்கப்பட்டுள்ளதாக சென்னை அணி நிர்வாகம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. கடந்த 13 வருடங்களாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக இருந்த மகேந்திரசிங் டோனி, பதவியை ருதுராஜிட் கையளித்துள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்!



உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நேற்று வியாழக்கிழமை மீண்டும் தீவிர ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது. கடந்த 6 வாரங்களுக்குப் பிறகு அந்த நகரில் ரஷ்யா நடத்தியுள்ள மிகக் கடுமையான தாக்குதல் இதுவாகும்.

இது குறித்து உக்ரைன் விமானப் படை வெளியிட்டுள்ள அறிக்கையில், கீவ் நகரைக் குறிவைத்து ரஷ்யா சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலுக்கு 2 பலிஸ்டிக் ரக ஏவுகணைகளையும், 29 க்ரூஸ் வகை ஏவுகணைகளையும் ரஷ்யா பயன்படுத்தியது. அந்த ஏவுகணைகள் அனைத்தையும் வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மூலம் இடைமறித்து அழித்தோம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி மாதம் படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. அந்தப் பிராந்தியங்களில் எஞ்சியுள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக ரஷ்யாவும், இழந்த பகுதிகளை ரஷ்யாவிடமிருந்து மீட்க உக்ரைனும் நடத்தி வரும் போர் அண்மைக் காலத்தில் மந்தமாகிவிட்டதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர தாக்குதல் கடந்த மாதத்திலிருந்து தீவிரமடைந்து வருகிறது. இந்தச் சூழலில், பல வாரங்களுக்குப் பிறகு தலைநகர் கீவைக் குறிவைத்து ரஷ்யா தீவிர ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

# ஆப்கானிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 21 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்ததாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், தலிபான் ஆட்சியாளர்கள் இந்தத் தாக்குதலில் 3 பேர் மட்டுமே உயிரிழந்ததாகக் கூறியுள்ளனர்.

இது குறித்து வெளியாகியுள்ள சர்வதேச ஊடகங்களின் செய்திகளில், ஆப்கானிஸ்தான் தெற்குப் பகுதி நகரமான கந்தஹாரின் முக்கியப் பகுதியில் அமைந்துள்ள வங்கிக்கு வந்த ஒருவர், தனது உடலில் மறைத்துவைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார். இதில் 21 பேர் உயிரிழந்ததாக அந்த நகர மருத்துமனை அதிகாரிகள் கூறினர். இருந்தாலும், இந்தத் தாக்குதலில் 3 பேர் மட்டுமே உயிரிழந்ததாக தலிபான் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, என்று குறிப்பிடப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். தலிபான்களின் தலைமைப் பீடமான கந்தஹாரில் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா வெளியேறிய பிறகு அந்த நாட்டை தலிபான்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு கைப்பற்றினர். அப்போது மிக மோசமாக இருந்த நாட்டின் பாதுகாப்பு நிலைமை நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வருவதாகக் கூறப்படுகிறது. இருந்தாலும், இஸ்லாமிய தேச (ஐஎஸ்) பயங்கரவாத அமைப்புகள் உள்ளிட்டவை தலிபான் படையினரைக் குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்திவருகின்றன. (04)

# மதுவரித் திணைக்கள பிரதி ஆணையாளராக கிழக்கு மாகாணத்திலிருந்து ஒருவர் நியமனம்



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை மது வரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக (மனித வளம்) கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர் ரோட்டரியன் சண்முகம் தங்கராஜா நியமிக்கப்பட்டார்.

மதுவரித் திணைக்கள வரலாற்றில் கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதி ஆணையாளர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

அவர் கொழும்பில் தனது பதவியை நேற்று (21) பொறுப்பேற்றுக் கொண்டார் .

இவர் மதுவரி திணைக்கள கிழக்கு மாகாண உதவி ஆணையாளராக செயற்படும் அதேவேளை, முழு இலங்கைக்கான பிரதி ஆணையாளராக பதில் கடமையையும் ஆற்றுவார்.

சண்முகம் தங்கராஜா பெரியகல்லாற்றை பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்ப கல்வியை பெரிய கல்லாற்றிலும், பின்னர் வந்தாறுமூலை மற்றும் மட்டக்களப்பு இந்து கல்லூரி ஆகியவற்றில் இடைநிலை, உயர்நிலைக் கல்வியையும் பெற்று மதுவரி திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக இணைந்து கொண்டார் .

சிறந்த விளையாட்டு வீரரான தங்கராஜா கல்முனை ரோட்டரி கழக தலைவராக இருந்து, தற்போது மட்டக்களப்பு ரோட்டரி கழகத்தின் நிருவாகசபை உறுப்பினராக சமூக பணியாற்றி வருகிறார்.

முன்னர், அம்பாறை மாவட்டத்தின் கலால் அத்தியட்சகராக கடமையாற்றிய சண்முகம் தங்கராஜா கிழக்கு மாகாணத்தின் புதிய உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று 01.01.2023 அன்று கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் உப தலைவராகவும், கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாகவும் இவர் செயற்படுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவையின் திட்ட முன்னெடுப்பு மீளாய்வு

(நூருல் ஹுதா உமர்)

மருதமுனையின் கல்வி மேம்பாடு மற்றும் ஒழுக்க சீராக்கம் ஆகிய விடயங்களை முன்னிறுத்தி மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை முன்வைத்த விடயங்களின் மீளாய்வுக் கூட்டம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் மருதமுனை அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் நேற்று (21) நடைபெற்றது.

கல்முனை வலயக்கல்வி பணிமனை பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம். ஜாபிர், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப் பாளர்களான எம். எச்.றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப் உள்ளிட்ட வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளுடன் மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள் இதில் பங்கேற்றனர்.

நோன்பு கால விடுமுறை வகுப்புக்கள் தொடர்பில் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டதுடன் பேரவையின் அங்குரார்ப்பண கூட்டத்தில் எடுக்கப்பட்ட முதலாவது தீர்மானமான “நோன்பு 20 வரை உயர்தரம் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் பாடசாலை நேரசூசி வகுப்புக்கள் மதியம் 12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும்” என்ற விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் 90 வீத்த்துக்கும் அதிகமான வெற்றியினை அடைந்திருப்பதாகவும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் கூட்டத்தின் தலைவர், வலயக் கல்விப்பணிப்பாளர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்பட்ட ஆசிரியர்களை அழைத்து கதைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கென குழுவொன்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது

உயர்தரப் பரீட்சை எழுதுகின்ற மாணவர்களின் குறுங்காலத்தை கருத்திற்கொண்டு ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றமில்லை எனவும் அது தொடர்பில் மாணவர்களின் இயலுமைக்கேற்ப ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டும் எனவும் மீள வலியுறுத்தப்பட்டது.மாணவர்களின் நோன்புகால செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெடுப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்மானமொன்றும் மேற்கொள்ளப்பட்டது

12 மணிக்கு முன்னர் வகுப்புக்களை நிறைவுறுத்த வேண்டும் என்பதில் பாடசாலை நேரசூசிகளை ஒரு நிலைப்படுத்துவதற்கான கலந்தாலோசனை முன்வைக்கப்பட்டு அதிபர்களின் ஏற்றுக் கொள்ளலுடன் கூட்டம் நிறைவுபெற்றது.




# யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மருத்துவ மாணவர்களின் ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக முஸ்லிம் மருத்துவ மாணவர்களின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டமும் வருடாந்த இப்தார் நிகழ்வும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அஷ்ஷெய்க் எம்.ஏ பைஸர் காசிமி மதனி மற்றும் யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களான டொக்டர். ஹனான், டொக்டர். அஷ்ரப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் தலைவர் அல்ஹாபில் ஸல்மானுல் ஹக், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வானது யாழ் மருத்துவ கல்லூரியின் 42வது அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்து.

# புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜிதின் வறுமை நிவாரண வேலைத்திட்டம்

(கற்பிட்டி- சியாஜ்)

புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜித் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நோன்பு காலத்தில் மாத்திரம் அல்லாமல் எல்லா காலங்களிலும் ஸாலிஹீன் பள்ளி பிரதேச வாசிகள் எவரும் வறுமையின் காரணமாக உணவு உட்கொள்ளாமல் இருக்க கூடாது என்ற மிகப் பெரிய நல்ல நோக்கத்துடன் அத்தியாவசிய பொருட்களை எந்த நேரத்திலும் இலவசமாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய உதவிகளை புத்தளம் நகரின் ஏனைய பள்ளிவாசல் பிரதேச வாசிகளும் அந்தந்த பள்ளிவாசல் நிர்வாகத்தின் உறுதிப்படுத்தலுடன் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வறிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு வசதியற்ற குடும்பங்கள் ஸாலிஹீன்மஸ்ஜித்நிர்வாகத்துடன்தொடர்பு கொண்டு தேவையான பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.தாங்களும் உதவிகளை வழங்குவதற்கு யாராவது விரும்பினால் புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜித் நிர்வாகத்தின் தலைவர் மௌலவி ஜிப்னாஸ் அவர்களை 0755051051 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# பாலியல் குற்றவியல் திருத்த சட்டத்தால் இலங்கையானது பாலியல் சேவைகளை வழங்கும் சந்தையாக மாறவுள்ளது

## தேசப்பற்றிற்கான தேசிய இயக்கத்தின் செயலாளர் குற்றச்சாட்டு



பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பிக்கும் நோக்கிலும், இலங்கையில் பாலியல் சந்தையை உருவாக்கும் நோக்கிலும் , குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக, தேசப்பற்றிற்கான தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின்படி, 16 வயதுக்குட்பட்ட சிறுமியொருவர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் துஷ்பிரயோகத்திற்கு ஆளானாலும், அது பாலியல் பலாத்காரம் வகையின் கீழ் அடங்குவதாவே அமைந்துள்ள போதிலும், நீதித்துறை அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கொண்டுவரவுள்ள புதிய குற்றவியல் சட்ட திருத்தத்தின் படி இந்த வயதெல்லையை 14 வயதாக குறைக்கவுள்ளதாகவும் வசந்த பண்டார குறிப்பிட்டுள்ளார்.

அதிலும் நாட்டு மக்களுக்கு உள்ள பிரதான பிரச்சினை இதுதான் என எண்ணிக்கொண்டா அரசாங்கம் இந்த மசோதாவை அவசர அவசரமாக கொண்டுவருகின்றது? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், "இதனையொரு தனிப்பட்ட சம்பவமாக கருத முடியாது. முன்னதாக, இலங்கையில் ஆயுர்வேத சட்டம் திருத்தப்பட்டு கஞ்சா பயிற்செய்கையை சட்டபூர்வமாக்க வழி அமைக்கப்பட்டுள்ளது, மறுபுறம், ஆயுர்வேத மருத்துவரின் மேற்பார்வையின்றி பெண்கள் மசாஜ் நிலையங்களில் மசாஜ் தெரபிஸ்டாக பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வாறான நிலையில், புதிதாக கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ள குற்றவியல் சட்டமானது இந்த நாட்டில் பாலியல் சேவைகளை வழங்கும் சந்தையை உருவாக்கும் செயல்பாட்டின் ஒரு படிமுறையாக அமையவுள்ளது" என்றார். (ரெம-72)

# உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்களில் சோதனையில் கண்டறியப்பட்ட சுகாதார சீர்கேடுகள்

## 174,000 ரூபா தண்டத்துடன் நீதிமன்றம் எச்சரிக்கை

*சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*

*அந்த வகையில் கடந்த சில நாட்களாக சங்கானை பிரிவு பொது சுகாதார பரிசோதகர், வட்டுக்கோட்டை பிரிவு பொது சுகாதார பரிசோதகர், அராலி பிரிவு பொது சுகாதார பரிசோதகர், சுழிபுரம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள், தங்கள் பிரிவுகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண் டனர்.*

*இதன்போது திகதி காலாவதியான உணவு பொருட்கள், பழுதடைந்த உணவு பொருட்கள், உரிய சுகாதார நடை முறைகளை பின்பற்றாத உணவகங்கள் என 14 உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் சிக்கிக்கொண்டன.*

*மேற்படி 14 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்றையதினம் (21) மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டன.*

*நேற்றையதினமே வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிமன்றம், உணவக உரிமையாளர்களிற்கு 174,000 ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது. (01)*

# யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் எரிபொருள் தாங்கி தடம்புரண்டது!

## டிப்பரொன்றும் விபத்துக்குள்ளானது



*யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் ஏ9 வீதியில் டிப்பரும் எரிபொருள் தாங்கியும் விபத்துக்குள்ளாகி தடம்புரண்டு சரிந்து விழுந்தன.*

*குறித்த சம்பவம் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ள நிலையில் வீதிப் போக்குவரத்து சில மணிநேரம் முற்றாக பாதிக்கப்பட்டது.*

*யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட இ.போ.ச. பேருந்தை முந்தி செல்ல முற்பட்ட எரிபொருள் தாங்கி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகி எரிபொருள் வீதியில் கொட்டியது.*

*சாதுரியமாக செயற்பட்ட இ.போ.ச. சாரதி பேருந்தை ஓரமாக நிறுத்திவிட்டார்.*

*இதன்போது வீதியில் வந்த டிப்பர் வாகனம் கொட்டியிருந்த எரிபொருளில் சறுக்கி விபத்துக்குள்ளானது.*

*விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.*

*இதனால் சில மணி நேரம் ஏ9வீதி வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. புகையிரத கடவை அருகில் இருந்த வீதி ஊடாக போக்குவரத்து இடம்பெற்றது.*

*விபத்து காரணமாக எரிபொருள் தாங்கியில் இருந்த ஒயில் வீதி முழுவதும் கசிந்து காணப்பட்டது.*

*விபத்துக்குள்ளான வாகனங்களை கனரக வாகனங்கள் மூலம் அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டதுடன் வீதியில் வாகனங்கள் சறுக்காது இருக்க மண்ணும் பரப்பப்பட்டது.*

*தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)*






# ஆசிரியர் இடமாற்றப் பிரச்சினை ஹரீஸ் எம்.பி. முக்கிய சந்திப்பு



(நூருல் ஹுதா உமர்)

அண்மைய கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தின் காரணமாகவும் மற்றும் பல காரணங்களினாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படும் அபாயம் உள்ள அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையிலான சந்திப்பொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ்க்கு மிடையில் நேற்று (21) ஆளுநர் வாசஸ் தலத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆசிரியர்களின் பிரச்சினைகள், முக்கிய பாடங்களுக்கு பதிலாளின்றிய இடமாற்றம்நடைபெற்றதால் நிலவும்ஆசிரியர் பற்றாக்குறை, அம்பாறை மாவட்ட பாடசாலைகளில் உள்ள ஆளணி விடயங்கள் தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு விளக்கினார்.

சகல பிரச்சினைகளையும் கேட்டறிந்த ஆளுநர் அதனையடுத்து கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குமாறும், குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடுமாறும், அடுத்த வார ஆரம்பத்தில் இது தொடர்பில் எடுத்த நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் சபை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளருமான யூ.எல். நூருல் /ஹுதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலந்திரகுமார் ஆகியோருக்குமிடையில்இது சம்பந்தமான சந்திப்பொன்று கல்முனை மாநகர சபை காரியாலயத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது முக்கிய பாடங்களுக்கு பதிலாளின்றிய இடமாற்றம்நடைபெற்றதால் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, அம்பாறை மாவட்ட பாடசாலைகளின் உள்ள ஆளணி விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு விளக்கினார்.

இதன்போது அங்கு பிரசன்னமாகியிருந்த கல்முனை கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர் வரணியா சாந்தரூபன் புள்ளிவிபரங்களுடன் கல்முனை கல்வி வலய ஆசிரியர் நிலைகளை விளக்கி பாடசாலைகள் பாதிக்கப்பட்ட விடயங்களை தெளிவுபடுத்தினார்.

சகல விடயங்களையும் ஆராய்ந்துணர்ந்த கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உடனடியாக இந்த பிரச்சினைகளை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2024 இல் வெளியிடப்பெற்றது.